# விபஸ்ஸனா
## செய்தி மடல்

(விபஸ்ஸனா : ஸயாஜி ஊபாகின் வழிமரபில், திரு சத்திய நாராயண கோயங்கா அவர்களால் போதிக்கப்படும் தியான முறை)

மலர் - 7, இதழ் - 2, டிசம்பர் -2013,
தமிழ் மாதப் பத்திரிக்கை

ஒரு மடலின் விலை - ரூ 2.50
ஆண்டு சந்தா - ரூ 30

விபஸ்ஸனா தியான மையம்
தம்ம சேது, சென்னை,
தமிழ்நாடு


# திரு. சத்ய நாராயண கோயங்கா: அக-அமைதியின் தூதுவர் (பாகம் 2)

*[குருஜி திரு. சத்ய நாராயண கோயங்கா அவர்களின் ஒரு சிறிய வாழ்க்கைத் தொகுப்பு]*



## பொற்காலம்:

இறுதியில், அவரது உயிருக்கான ஆபத்து நீங்கியது. அதன் பின், அவர் தமது வாழ்வின் பொற்காலம் என்று அழைத்த அக்கட்டத்தில் நுழைந்தார். வியாபார பொறுப்புக்களிலிருந்து விடுவிக்கப்பட்டு, அவர் அதிக நேரம் தமது ஆசிரியருடன் தம்மத்தில் தம்மை ஆழ்த்தியபடி காலத்தை கழித்தார். அவருக்கு இதையன்றி வேறுதுவும் தேவைப்பட்டதில்லை. ஆனால், ஊ பா கின் அவர்களுக்கு வேறு திட்டங்கள் இருந்தன. புத்தருக்கு பின் 2500 வருடங்கள் கழித்து, தம்மம் மியான்மார் நாட்டிலிருந்து மீண்டும் தான் தோன்றிய பூமியான இந்தியாவிற்கு வந்தடைந்து, அங்கிருந்து உலகம் முழுவதும் பரவும் என்னும் தீர்க்கதரிசனத்தை அவர் நினைவுபடுத்தினார். புத்தரின் போதனையின் சாரமான விபஸ்ஸனா தியானத்தை மீண்டும் இந்தியாவில் ஸ்தாபனம் செய்வதன் மூலம் இந்த தீர்க்கதரிசனத்தை பூர்த்தி செய்வதே ஊ பா கின் அவர்களின் நீண்டகால விருப்பமாக இருந்தது. ஆனால், 1960 களில் மியான்மார் அரசு தமது குடிமக்களை வெளிநாட்டிற்கு செல்ல அனுமதிக்கவில்லை. ஆனால், கோயங்காஜி இந்திய வம்சாவளியை சார்ந்தவராக இருந்ததால், அவருக்கு அனுமதி கிடைக்க வாய்ப்பு இருந்தது.

1969 ல் அந்த வாய்ப்பு கிடைத்தது. கோயங்காஜியின் பெற்றோர்கள் இந்தியாவில் தான் இருந்தனர். அவரது தாய் நோயுற்று இருந்தார். இந்தியாவிற்கு செல்ல அரசாங்கமும் அனுமதி அளித்தது.

கோயங்காஜி இந்தியாவிற்கு செல்வதற்கு முன், ஊ பா கின் அவர்கள் அவரை ஒரு விபஸ்ஸனா ஆசிரியராக நியமித்தார். மியான்மாரிலுள்ள இந்தியர்களுக்காக நடத்தப்பட்ட இரண்டு

> **புத்தரின் கடைசி தம்ம வாக்கு**
>
> **ஹந்ததானி பிக்கவே!**
> **ஆமந்தயாமி வோ.**
> **வயதம்மா ஸங்காரா**
> **அப்பமாதேன**
> **ஸம்பாதேத்த**
> பிக்குகளே! ஸங்காரங்கள் அனைத்தும் அழியக் கூடிய இயல்புடையதே. விழிப்புணர்வுடன் உங்கள் விடுதலைக்கு நீங்களே முயற்சி செய்யுங்கள்.
> *(மகாபரிநிப்பாண சுத்தங்: புத்தரின் இறுதி நாட்களில் அளித்த பேருரை)*

முகாம்களில் கோயங்காஜி அவர்கள் தமது ஆசிரியர் முன்னிலையில் கற்பித்தார். ஆசிரியராக அவரது முதல் முகாம், மாண்டலே நகரில், ஒரு கட்டிடக் கூரையில் தான் அமைந்தது. இக்கட்டிடம் இரண்டு சினிமா தியேட்டர்களுக்கு மத்தியல் அமைந்திருந்தது. மூங்கிலில் செய்யப்பட்டிருந்த பாய் இருப்பிடத்தில் தான் மாணவர்கள் தங்கினர். ஆனால், இது மாணவர்களைக் கவலையில் ஆழ்த்தவில்லை. கோயங்காஜி அவரது ஆசிரியரிடமிருந்து நேரடி ஆசிரியர் பயிற்சியைப் பெற்றார்.

மாணாக்கள் இந்தியர்களாக இருந்ததால், அவர் ஹிந்தியிலேயே பேருரைகளை வழங்கினார். ஸயாஜி ஊ பா கின் அவர்களுக்கும் அது புரிந்திருந்தது. அவ்வப்பொழுது அவர் கோயங்கா அவர்களுக்கு குறிப்பிட்ட புத்தர் கதைகளையும் பேருரைகளும் கூறுமாறு வலியுறுத்துவார்.

**இந்தியாவில் . . .**



ஜூன் 1969ல், கோயங்காஜி இரங்கூனிலிருந்து கொல்கத்தாவிற்கு ஒரு விமானம் மூலம் வந்தடைந்தார். அவர் வரும் முன், "நீ மட்டும் செல்லவில்லை, நானும் தான் வருகிறேன், தம்மம் செல்கிறது" என்று ஸயாஜி கூறினார். ஸயாஜி ஊ பா கின் அவர்களால் மியான்மாரை விட்டு வெளியே செல்ல இயலாததால், அவர் தம் பிரதிநிதியாக, தம்ம தூதராக, தமது மாணவர் கோயங்காஜியை அனுப்பி வைத்தார். இந்த வரலாற்று சிறப்புமிக்க தருணத்தை அவர் நன்கு அறிந்திருந்தார். இருப்பினும், இந்தியாவில் அவரது இருப்பு தற்காலிகமானதே என்றும், மீண்டும் அவர் மியான்மார் சென்று தமது ஆசிரியருடம் தியானம் செய்வோம் என்றும் அவர் எண்ணியிருந்தார். உண்மையில், அவர் மீண்டும் மியான்மார் செல்வதற்கு 20 ஆண்டுகள் எடுத்தன.

அச்சமயம் இந்தியாவில், அவருக்கு தெரிந்த நபர்கள் மிகவும் குறைவாகவே இருந்தனர். புத்தரின் போதனை மீதும் குறைந்த மதிப்பீட்டை வைத்திருந்த நாடாக இந்தியா இருந்தது. விபஸ்ஸனா என்ற வார்த்தையைக் கூட மறந்திருந்தது. ஆனால், அவரது குடும்பத்தினர்களின் உதவி கொண்டு, மும்பையில் கோயங்காஜி முதல் முகாமை எடுத்தார். அதில் அவரது பெற்றோர்கள் உட்பட சிலர் பங்கேற்றனர். ஒரு பிரஞ்சு மாணவியும் பங்கேற்றாள். முகாம் இறுதியில் அவள் கோயங்காஜியை பிரான்ஸ் நாட்டிற்கு தியானத்தைக் கற்பிக்க அழைத்தார். ஆனால், இந்த வேண்டுகோளை பத்து ஆண்டுகளுக்கு பிறகு விடுக்குமாறு கோயங்காஜி அவளுக்கு கூறினார்.

முதல் முகாமிற்கு பிறகு, அடுத்தடுத்த முகாம்கள் நடத்தப்பட்டன. தம்ம சக்கரம் அது தோன்றிய நாட்டில் சுழலத் தொடங்கியது. கோயங்காஜி நாடு முழுவதும், பயணிக்கத் தொடங்கினார். பெரும்பாலும், இரயிலின் மூன்றாவது வகுப்பில் கூட்டத்துடன் பயணிக்க வேண்டியிருந்தது. முகாமில், அவருக்கு



உதவி புரிய பழைய மாணவர்கள் எவரும் இருக்கவில்லை; அவர் தாமே மாணவர்களுக்கு முகாம் தொடக்கத்தில் தங்கும் அறைகளை நியமிப்பார்; சாப்பிடம் நேரத்தில் மாணவர்களுக்கு தாமே உணவு பரிமாறுவார்; பெரும்பாலும் தம்மக் கூடமாக ஒரு கூடாரம் அமைக்கப்பட்டது. இராஜகிரியில், ஒரு முகாமின் பொழுது, இரவு நேரத்தில் ஒரு புயல் கூடாரத்தை சேதப்படுத்தியது. ஆனால், அடுத்த நாள் காலையில், கோயங்காஜி அவரது தம்ம ஆசனத்தில் உட்கார்ந்து காலை தம்மப் பாடல்களைப் பாடி மாணவர்களுக்கு உற்சாகத்தை அளித்துக்கொண்டிருந்தார்.

சூழ்நிலைகள் பெரும்பாலும், கடுமையாகவே இருந்தன; அவரிடம் பணமும் ஆதரவும் குறைவாகவே இருந்தன; அவரது மனைவி திருமதி. இலாய்ச்சி தேவி அவர்கள்(மாதாஜி என்று தியானிகள் அழைத்தனர்) மியான்மாரில் தங்கியிருந்ததால் அவர் இங்கு தனிமையில் இருந்தார். இருப்பினும், அவர் பிறவிப் பயனை அடைந்த ஒருவரது மகிழ்ச்சியைப் போல மகிழ்ச்சியையே வெளிப்படுத்தினார். ஆரம்ப காலத்தில், அவர் ஹிந்தியில் தான் கற்பித்தார். அவரது நற்பெயர் பரவியதும், வெளிநாட்டினர் அவரிடம் கற்க விரைந்தனர்.

(அடுத்த இதழில் தொடரும் . . .)

## புண்ணிய பலன்கள் பெற ஒரு அரிய வாய்ப்பு

தமிழகத்தின் இரண்டாவது விபஸ்ஸனா தியான மையமான ‘தம்ம மதுரா’வை நிறுவும் பணி மகிழ்ச்சிகரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆரம்பகட்டமாக 15 தியானிகள் தங்குவதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டு தியான முகாமும் தொடங்கப்பட்டுவிட்டது. இதற்கான நன்றி உடல், மனம் மற்றும் பொருள் அளவில் உவகை உள்ளத்துடன் உதவிய தியான சாதகர்களையே சாரும். முதற்கட்டமாக 40 தியான சாதகர்கள் தங்குவதற்கான இருப்பிடங்கள் கட்டும் பணி 70 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு வேலையும் மும்முரமாக நடைபெற்று வருகிறது. தற்போது கைவசம் 40 லட்சம் ரூபாய் மட்டும் உள்ளதால் மீதம் 30 லட்சம் ரூபாய் தேவைபடுகிறது. நன்கொடை செலுத்த வேண்டிய வங்கி மற்றும் தொடர்பு விபரங்கள்

| | | | |
|---|---|---|---|
| Bank | State Bank of India, Anaiyur Branch, Madurai, | Account number | 31262542660 |
| Account Name | VIPASSANA MEDITATION CENTRE, MADURAI, | SBI branch IFS Code | SBIN0012764 |
| SBI Swift code | SBININBB454, | | |
| Contact Mobile No. | 9443728116 / 9442603490 | Email ID | dhammamadhura@gmail.com |

RNI TC NO: TNTAM 17399/26.03.07, RDIS NO: 126/07,
REGISTRAR OF NEWSPAPERS FOR INDIA NO: TNTAM/2007/22647 POSTAL REG NO: TN/CH©/140/14-16

# விபஸ்ஸனா முகாம்கள் கால அட்டவணை

## தம்ம மதுரா

**விபஸ்ஸனா தியான மையம், செட்டியாபட்டி கிராமம், திண்டுக்கல், காந்திகிராம் பல்கலைக்கழகம் அருகில்**

2013 10-நாள் முகாம்கள்: டிசம்பர்: 18-29

2014 10-நாள் முகாம்கள்: **ஜனவரி: 8-19. பிப்ரவரி: 5-16, மார்ச்: 5-16. ஏப்ரல்: 2-13. மே: 7-18. ஜூன்: 4-15. ஜூலை: 2-13. ஆகஸ்டு: 6-17. செப்டம்பர்: 3-14. அக்டோபர்: 1-12. நவம்பர்: 5-16. டிசம்பர்: 3-14.**

**3-நாள் முகாம்கள்:** ஜனவரி: 4-7. பிப்ரவரி: 1-4. மார்ச்: 1-4. ஏப்ரல்: 14-17. மே: 3-6. ஜூன்: 15-18. ஜூலை: 14-17. ஆகஸ்டு: 2-5. அக்டோபர்: 12-15. **சிறுவர் முகாம்கள்:** 19/1, 16/2, 16/3, 13/4, 18/5, 13/7, 17/8, 14/9, 16/11.

பதிவு செய்ய: 1. திருமதி. ரேணுகா மேத்தா - 9443728116 / 9442603490, 2. திரு. மகேஷ் பன்சல் - 9843451153

இணையதளம் மூலம் பதிவு செய்ய: <http://courses.dhamma.org/en/schedules/schmadhura,
மின் அஞ்சல்: dhammamadhura@gmail.com

## தம்ம சேது

**விபஸ்ஸனா தியான மையம், 533, பழந்தண்டலம் சாலை, திருநீர்மலை வழி, திருமுடிவாக்கம், சென்னை**

### 2013 கால அட்டவணை

**10-நாள் முகாம்கள்: டிசம்பர்:** 4-15, 18-29. **சிறுவர் முகாம்கள்:** 1/12, 29/12.

### 2014 கால அட்டவணை

**10-நாள் முகாம்கள்: ஜனவரி:** 1-12, 15-26. **பிப்ரவரி:** 19-2, **மார்ச்:** 5-16, 19-30. **ஏப்ரல்:** 9-20, 23-4. **மே:** 14-25. **ஜூன்:** 4-15. **ஜூலை:** 2-13, 16-27. **ஆகஸ்டு:** 30(ஜூலை)-10, 13-24. **செப்டம்பர்:** 3-14. **அக்டோபர்:** 22-2(நவம்பர்). **நவம்பர்:** 12-23, 26-7(டிசம்பர்). **டிசம்பர்:** 10-21, 24-4(ஜனவரி); **ஸதிபட்டான முகாம்கள்: பிப்ரவரி:** 1-9. **ஜூன்:** 21-29. **செப்டம்பர்:** 18-26

**20-நாள் முகாம்:** 18 செப்டம்பர் முதல் 9 அக்டோபர் வரை, **30-நாள் முகாம்:** 18 செப்டம்பர் முதல் 19 அக்டோபர் வரை. **3-நாள் முகாம்கள்:** ஜனவரி: 29-1. பிப்ரவரி: 13-16. ஏப்ரல்: 3-6. மே: 8-11, 29-1. ஜூன்: 18-21. ஆகஸ்டு: 28-31. நவம்பர்: 6-9. **1-நாள் முகாம்கள்:** 5/1, 2/2, 2/3, 6/4, 4/5, 14/5(புத்த பௌர்ணமி), 1/6, 6/6, 12/6(குரு பௌர்ணமி), 3/8, 7/9, 5/10, 2/11, 7/12. **சிறுவர் முகாம்கள்:** ஏப்ரல் 20. மே 11, 25. டிசம்பர் 28.

### ஒரு நாள் தியான முகாம்கள்

*1. இடம்: பாலானந்தா வித்யாலயா, தி.நகர். நேரம்: ஞாயிறு காலை 9:00 முதல் 3:00 மணி வரை (தொலைபேசி: 9445391295)*

*2. கோவை: மாதத்தின் கடைசி ஞாயிறு. (தொலைபேசி: திரு. பரத் ஷா: 9842347244*

### கூட்டுத்தியானம்

*1. **கோவை:** ஞாயிறுதோறும் காலை 8 முதல் 9 வரை (தொலைபேசி: திரு மகேஷ்: 9843451153)*

### மற்ற இடங்களில் 10-நாள் முகாம்கள்

**1. இடம்**: *அரவிந்த் ஹெர்பல்ஸ், இராஜபாளையம்;* **தேதி:** *பிப்ரவரி 26 முதல் மார்ச் 9 வரை, 2014;* பதிவு செய்துகொள்ள: 1. திருமதி அருணா: 9150131335

Published by V. Santhanagopalan on behalf of Vipassana Meditation Centre, from Flat No. T2, Akshaya Flats, 55 Irusappa Street, Triplicane, Chennai 600005 and printed by R. N. Yogi at Leeyo Graphiks, New No. 6, Gaffur Street, Royapettah, Chennai 600014. Editor: V. Santhanagopalan

REGISTERED NEWSPAPER; Published on: 04/12/2013, Posted on: 12/12/2013
POSTED AT EGMORE ,
RMS/1 (PATRIKA CHANNEL)

*அனுப்புனர்:* Vipassana Meditation Centre, T2 Akshaya Flats, 55-Irusappa st, IceHouse, Chennai 5